சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

**முன்னிலை: திரு.** L. **மகேஸ்வரி,** M.L.,

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 3-ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண்.89/2025

***(CNR.No.TNMD240002152025)***

M.பணக்கொடி ... வாதி

/ எதிர் /

1. வீரணன்
2. பாரத்
3. பழனி
4. பவித்ரா ... பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 01.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. லட்சுமணன் அவர்கள் முன்னிலையாகியும், 1வது பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P.R. பிரம்மதேவன் அவர்கள் முன்னிலையாகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை ஒட்டி சார்வு செய்தும், தனிநபர் அழைப்பாணை சார்வு செய்தும் அவர்கள் ஆஜராகாத காரணத்தினால் அவர்கள் தோன்றாத்தரப்பினரர்களாக கருதப்பட்டு, வாதி தரப்பு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டும் இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ஒருதலைபட்ச…

## தீர்ப்புரை

பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்த வேண்டிய பிராதுத் தொகை ரூ.2,43,767/-ஐ செலுத்தவும், அசல் தொகை ரூ.1,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழக்கு முடியும் தேதிவரை 12 சதவீதம் வட்டியும், அதன்பின்னிட்டு தொகை வசூலாகும் தேதிவரை 6 சதவீதம் வட்டியும் செலுத்தக் கோரியும், வழக்கு செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1**. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :**

1ம் பிரதிவாதி, 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் தந்தை ஆவார். தாவா சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவண எண்.1764/2006-ன் படி பாத்தியப்பட்டது ஆகும். தாவா சொத்தை 1வது பிரதிவாதி, வாதிக்கு விற்பனை செய்ய சம்மதித்து ரூ.4,21,800/- என விலை நிர்ணயித்து, ரூ.1,00,000/-ஐ கிரைய முன்தொகையாக பெற்றுக்கொண்டு, மீத கிரையத்தொகை ரூ.3,21,800/-ஐ 3 மாத காலகெடுவிற்குள் வாதி கொடுத்து கிரையம் முடிக்க வேண்டும் என பேசி 19.06.2013ம் தேதிய பதிவு கிரைய உடன்படிக்கை ஆவணம் (ஆவண எண்.2267/2013) பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் மீத கிரையத்தொகையை கொடுக்க வாதி முன்வந்தபோதும், 1ம் பிரதிவாதி வீண் காலதாமதம் செய்து வந்துள்ளார். தற்போது 11 வருடங்கள் கடந்தவிட்டபடியாலும், இந்திய காலவரையறை சட்டத்தின்படி காலக்கெடு

முடிவடையயுள்ளதாலும் கிரைய முன்தொகையை உரிய வட்டியுடன் திருப்பிச் செலுத்துமாறு கடந்த 25.04.2025ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு, வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1ம் பிரதிவாதி பொய்யான சங்கதிகளை கூறி பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார். பின்னர் இதுசம்மந்தமாக 1ம் பிரதிவாதி மதுரை தெற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்யக்கூறி புகார் அளித்து, மேற்படி புகார் விசாரணையின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுரை வழங்கியுள்ளார். எனவே மேற்படி கிரைய முன் தொகையை வட்டியுடன் பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடக்கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. 1வது பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினாலும் அவர்கள் தோன்றாத்தரப்பினரர்களாக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பில் வா.சா.1 ஆக சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலிக்கும் போது வாதி தன்னுடைய வழக்கினை மெய்ப்பிப்பதற்காக 25.07.2006ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் (ஆவண எண்.1764/2006) அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 19.06.2013ம் தேதிய வாதியும், பிரதிவாதிகளும் உசிலம்பட்டி, சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த ஆவணம் (ஆவண எண்.2267/2013) அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 25.04.2025ம் தேதிய பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 25.04.2025ம் தேதிய வாதிக்கு, பிரதிவாதி அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.4 ஆகவும், மதுரை தெற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து, வாதிக்கு அனுப்பப்பட்ட விசாரணை அழைப்பாணை அசல் வா.சா.ஆ.5 ஆகவும், மேற்படி புகாருக்கு வாதி தாக்கல் செய்த பதிலுரை அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாத்தரப்பினரர்களாக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் இந்த வழக்கின் முழு விபரங்கள் தெரிந்தும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் வாதியின் வழக்கு விபரங்களை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே பிரதிவாதிகளுக்கு எதிரான இந்த வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. வாதியிடம் பெற்ற கடனை பிரதிவாதிகள் திருப்பி செலுத்தக்

கடமைப்பட்டவர்கள். எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ வாதி கோரிய பிராதுத் தொகை ரூ.2,43,767/-ஐ வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும், மேற்படி அசல் தொகை ரூ.1,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்புத் தேதி வரை 9% வட்டியுடனும், தீர்ப்புத் தேதியிலிருந்து மேற்படி அசல் தொகை ஈடாகும் வரை 6% வட்டியுடனும் வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 3-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

L MAHESWARI
Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.03 02:56:20 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

<u>வாதி தரப்பு சாட்சி</u>:

வா.சா.1 பணக்கொடி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.07.2006 | 1ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் (ஆவண எண்.1764/2006) அசல் |
| வா.சா.ஆ.2 | 19.06.2013 | வாதியும், பிரதிவாதிகளும் உசிலம்பட்டி, சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த ஆவணம் (ஆவண எண்.2267/2013) அசல் |
| வா.சா.ஆ.3. | 25.04.2025 | பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4. | 25.04.2025 | வாதிக்கு, பிரதிவாதி அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு நகல் |
| வா.சா.ஆ.5. | | மதுரை தெற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து, வாதிக்கு அனுப்பப்பட்ட விசாரணை அழைப்பாணை அசல் |
| வா.சா.ஆ.6. | | மேற்படி புகாருக்கு வாதி தாக்கல் செய்த பதிலுரை அலுவலக நகல் |

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.03 02:56:27 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.